ஓம்

தருமசீலன்.

“ அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.”

(All Rights Reserved.)

புத்தகம் 7	இரத்தாட்சிஸூ ஐப்பசிமீ 1924ஸூ நவம்பர்மீ	சஞ்சிகை 7.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

விருத்தாப்பியத்தில் ஆடவரை மகளிர் இகழ்வ ரென்பது.

“ இன்புகை யார்ந்த விழுதார்மென் பள்ளிமேல்
அன்புருகு நல்லா ரவர்தோண்மேற் றுஞ்சினர்
தம்புலன்கள் குன்றித் தளரத்தங் காதலார்
அன்புருகு கண்புதைத் தாங்ககல்வர் நெஞ்சே,”

(இ-ள்.) “நெஞ்சே! இனிய வாசனைப்புகை நிறைந்ததும், வெண்ணெய் போன்ற மென்மைத் தன்மை பொருந்தியதுமான, பஞ்சணைப் படுக்கையின் மேல், அன்பினாலே உருகுகின்ற நல்ல பெண்களாகிய அவர் தோள்மேல் சேர்ந்து தூங்கி இளமையில் இன்பத்தை அனுபவித்த ஆடவர்கள், (மூப்படைந்து அதனாலே) தம்முடைய ஐம்புலன்களின் உணர்ச்சிகளுங் குறைந்து தளர்ச்சியடைய, முன்னே அவர்களுடைய காதலைப் பொருந்தியவர்களாகிய அம்மாதர்களே, அவர்களைப் பார்த்து அருவருத்து அன்பினால் இளகுகின்ற தம் கண்களை மூடிக்கொண்டு அவர்களைவிட்டு விலகிச் செல்வார்கள். (ஆதலால், இத்தகைய நிலையற்ற அன்பினையுடைய மாதர் இன்பத்தை விரும்பலாகாது)” என்பதாம்.

பாலிய காலத்தில் ஆடவர்மீது விருப்படைந்திருந்த மாதர் மூப்புக்காலத்தில் அவரைப் பார்த்தருவருத்துக் கண்களை மூடி விலகிச் செல்வாராதலின், அத்தகைய நிலையில்லா அன்பினையுடைய மாதர் விருப்பினை யகற்றி நிலைத்த பேரின்பத்தைத் தேடவேண்டுமென்பது இதன் கருத்து. இழுது-வெண்ணெய். பள்ளி-படுக்கை. ஆர்-உவமவுருபு. ஆங்கு-அசை.

(சீவகசிந்தாமணி 1576)

தருமசீலன்.

இரத்தாட்சி௵ ஐப்பசி௴.

"தெய்வஞ்சீறிற் கைதவமாளும்."

இதன் பொருள்:—தெய்வம் - கடவுள், சீறின் - கோபித்தால், (அதாவது: ஒருவன் தீய ஒழுக்கங்களில் நடந்து அதன்பொருட்டுத் தன்னைக் கடவுள் கோபிக்கும்படி செய்து கொள்வானானால் அக் கோபத்தினாலே), கைதவம்-(அவனாற்செய்யப்பட்டு அவனுடைய) கையிற் சேர்ந்திருந்த தவமானது, மாளும்-அழிந்து விடும்" என்பதாம்.

நல்லொழுக்கங்களை யுடையவன் மீது கடவுள் அன்புடையவராயிருப்பார்; அவருடைய கிருபையால் அவனுடைய தவம் முதலியன விருத்தியடைந்து அவன் முடிவில், முடிவில்லாத இன்பத்தை யுடைய முத்தியை அடைவான்; தீய ஒழுக்கங்களிற் பிரவேசிப்பானாயின், அவன் முந்தி எவ்வளவு தவங்களைச் செய்திருந்த போதிலும் அவன்மீது கடவுள் விருப்புடையவராகமாட்டார்; மிக்க கோபத்தையே செலுத்துவார்; அக்கோபத்தினால் அவன் முன்னே செய்திருந்த தவங்களெல்லாம் அழியும்; அங்ஙனம் அவை கெடவே அவனுக்கு நற்கதி கிடைக்காமற்போகும்; தீக்கதியே சித்திக்கும். ஆகவின், அங்ஙனம் கடவுள் கோபத்திற்காளாகித் தீய காரியங்களைச் செய்து துர்க்கதியை அடையாமல் ஒவ்வொருவரும் இந்நீதியைக் கடைப்பிடித்து நற்காரியங்களைச்செய்து தேவ கிருபையைத் தேடி நற்கதியடைய முயற்சி செய்யவேண்டும்.

(திருவருட்சகாயம்.)

இந்தியாவைப்பற்றிய பழைய குறிப்புகள்.

"ஒரு சரித்திரக்காரன்" எழுதுவது.

இந்தியாவைப் பற்றி கிரேக்க ஆசிரியரிற் பலர் பலவிதமான குறிப்புகள் எழுதிவைத்தனர். அவைகளிற் பல மறைந்துபோயின; சில வேற்றுருவங் கொண்டு உலவுகின்றன. ஏறக்குறைய இப்

பொழுது இந்திய மாணவரிற் பெரும்பாலோர், சந்திரகுப்தனுடைய சந்நிதானத்திலிருந்து இந்தியாவைப்பற்றி எழுதிவைத்த மெகாஸ்தனேசன் என்னும் கிரேக்க ஆசிரியன் ஒருவனைப்பற்றியே அறிவர். ஆனால் மெகாஸ்தனேசனைப்போல் பல கிரேக்க ஆசிரியர்கள் அவனுக்கு முன்னும் பின்னும் இந்தியாவுக்கு விஜயம் செய்தோ, அல்லது இந்தியாவிலிருந்து வந்தவர்கள் கூறும் விவரங்களை ஆதாரமாகக் கொண்டோ இந்தியாவைப் பற்றி நூல்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். இங்ஙனம் எழுதி வைத்தவர்களின் மூலங்கள் இப்பொழுது அகப்படவில்லை. இவர்கள் எழுதிவைத்ததைப் பிற்கால ஆசிரியர்கள் தங்கள் நூல்களில் இடைஇடையே குறிப்பிடுவதையே நாம் இப்பொழுது ஆதாரங்களாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இச்சிறு வியாசத்தில் தேசியாஸ் என்னும் கிரேக்க ஆசிரியன் ஒருவன் இந்தியாவைப் பற்றி எழுதிவைத்ததாகச் சொல்லப்படும் சில குறிப்புகளை வெளியிடுகிறேன். இந்தத் தேசியாஸ் என்பவன், முதன்முதலாக இந்தியாவைப் பற்றித் தனி நூல் ஒன்று எழுதி கிரேக்கர்களுக்கு தெரிவித்த கௌரவத்தைப் பெறுகிறான். இவன் இந்தியாவுக்கு நேரே வந்து யாவற்றையும் தெரிந்துகொண்டு பிறகு இந்தியாவைப்பற்றி ஒரு நூல் எழுதினானில்லை. இவன் பாரசீக தேசத்து அரசனான அர்தார்க்ஸார்க்ஸேஸ் நேமான் என்பவனுடைய வைத்தியனாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவ்வரசனுடைய சமுகத்திற்கு வரும் இந்தியர்களையும், இந்தியாவைப்பற்றி அறிந்திருக்கும் மற்ற பாரசீகர்களையும் கேட்டு, அக்கேள்வி வாயிலாகவே இவன் இந்தியாவைப்பற்றி ஒரு நூல் எழுதினான். இவன் பாரசீக தேசத்தினின்றும் தன் நாட்டிற்கு கி. மு. 398-ம் வருஷத்தில் திரும்பினான். அதன் பிறகே இந்தியாவைப் பற்றிய நூலொன்றை இவன் எழுதினான் என்று லாசன் என்னும் அறிஞர் கூறுகிறார். இவன் இந்தியாவைப்பற்றி எழுதிவைத்த குறிப்புகளில் பல விநோதக் கூற்றுகளாகவும் புனைந்துரைகளாகவும் இருக்கின்றன என்று இந்தக் கிரேக்க ஆசிரியனைச் சரித்திரக்காரர் தூற்றிவந்தனர். ஆனால் பிற்கால ஆராய்ச்சியினால் இவனுடைய கூற்றுக்களில் சிலவேனும் உண்மையாயிருக்கலாமென்றும், இவன் நூலில் காணப்பட்ட பொய்யுரைகளுக்கு இவன் காரணனல்லன் என்றும், இந்தியாவில் வழங்கப்பட்டவைகளைப் பிரயாணிகள் எடுத்துக் கூறியவண்ணம் இவன் தொகுத்து எழுதினானென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இனி

தேசியாஸ் இந்தியாவைப்பற்றிக் கூறிய உரைகள் சிலவற்றின் சாராமிசத்தை ஈண்டுக் குறிப்பிடுகிறேன். "சிந்து நதியானது குறுகியோடும் இடத்தில் நாற்பது ஸ்டேடியாவும் விரிவான இடத்தில் இருநூறு ஸ்டேடியாவும் (தேசியாஸ் நூறு ஸ்டேடியாவே கூறினன் என்று வேறொரு கிரேக்க ஆசிரியன் குறிப்பிடுகிறான்) இருக்கின்றன. இந்தியர்களே (உலகத்திலுள்ள) மற்றெல்லா மனிதரையும்விட அதிகமா யிருக்கிறார்கள். சிந்து நதியில் ஒருவித பூச்சி தவிர வேறெவ்விதமான ஜந்துக்களும் வசிப்பதில்லை. இந்த நதி மலைகளினின்றிழிந்து சமவெளி வழியாக ஓடுகிறது. இந்தியாவில் மழையே பெய்வதில்லை. நதிகளே ஜனங்களுக்கு ஜலாதாரமா யிருக்கின்றன."

"இந்தியாவில் சுவர்களைத் தகர்த்தெறியும்படியான பெரிய யானைகள் இருக்கின்றன. நான்கு முழம் நீளமுடைய வாலைக் கொண்ட குரங்குகள் இருக்கின்றன. பெரிய கோழிகள் காணப்படுகின்றன. மனிதனுடைய குரலைக்கொண்ட கிளி என்னும் ஒரு பட்சியும் இருக்கிறது. இந்தப்பட்சி இந்தியர்களுடைய பாஷையைப் பேசுகிறது. கிரேக்க பாஷையைக் கற்றுக்கொடுத்தால் அதையும் பேசுகிறது."

"பொன் திராவகத்தையுடைய ஊற்று காணப்படுகிறது. இதிலிருந்து வருஷந்தோறும் நூறு தொட்டிப் பொன் எடுக்கப்படுகிறது. இந்த ஊற்றின் சுற்றளவு 11 முழமாகும். இதன் ஆழம் ஒரு பாதம்-அல்லது ஒரு சாணே-ஆகும். இந்த ஊற்றின் கீழ் இரும்பும் அகப்படுகின்றது. இந்த இரும்பைப் பூமியில் பதிபவைத்தால் மழை, இடி, காற்று முதலியவற்றை நிறுத்தி விடுகின்றன."

" இந்தியாவில் சிங்கத்தோடு போர் தொடுக்கும் நாய்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தியாவிலுள்ள மலைகளில் கோமேதகம் முதலிய இரத்தினங்கள் உண்டாகின்றன என்று தெரிகிறது. சூரியன் மற்ற நாடுகளில் தோன்றுவதைவிட இந்தியாவில், அளவில் பதின்மடங்கு அதிகமாகவே தோன்றுகிறான். சூரிய வெப்பம் தாங்கமுடியாமல் பலர் இறந்து போகின்றனர். இந்தியாவினுடைய சமுத்திரங்கள், மேல் மட்டத்தில் சுமார் நான்குவிரல் அளவுவரை மிகவும் உஷ்ணமாகவே யிருக்கின்றன. . எனவே மீன் முதலிய ஜந்துக்கள் மிகுந்த ஆழத்திலேயே வசிக்கின்றனவன்றி மேல் மட்டத்திற்கு வருவதில்லை."

“இந்தியர்கள் மிகவும் நியாயமுள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள். நிர்மானுஷ்யமான ஓர் இடத்திற்குச் சென்று சூரியனையும் சந்திரனையும் வணங்குகிறார்கள். இந்த நிர்மானுஷ்யமான இடம் சார்தெளஸ் மலையிலிருந்து பதினைந்து நாள் பிரயாண தூரத்திலிருக்கிறது. (சார்தெளஸ் மலையென்பது விந்திய பர்வதத்தினின்று பிரிந்து செல்லும் சார்தைன் மலையே என்று சரித்திரக்காரர் துணிந்திருக்கின்றனர்.) இந்த இடத்தில் ஒவ்வொரு வருஷமும் முப்பத்தைந்து நாட்கள், சூரியன், பக்தர்கள் தன்னைத் தொழுவதற்காகக் குளிர்ச்சியுடன் காய்கிறான். இங்ஙனம் வணங்கிவிட்டுத் திரும்பிச் செல்வோரிடத்தும் சூரியன் தன் உஷ்ணமான கிரணங்களால் தாக்குவதில்லை. இந்தியாவில் இடி, மின்னல், மழை முதலியன ஒன்றும் இல்லை. ஆனால் சுழற்காற்றுகளே அதிகமாயிருக்கின்றன. இவைகள் அடிக்கடி தோன்றுவதுமன்றி தோன்றிய காலத்து எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு செல்கின்றன. சூரியன் காலையில் உதயமாகுங் காலத்தில் குளிர்ச்சியைக் கொடுக்கிறான்; ஏறக்குறைய இந்தியா முழுவதும் இங்ஙனமே இருக்கிறது.”

“இந்தியர்கள் சூரிய வெப்பத்திற்கு ஈடு கொடுக்கின்றவர்களாதலின் கறுப்பாயிருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவர்களுடைய இயற்கையே அதுவாகும். ஏனென்றால் இந்தியாவில் உலகத்திலுள்ள மற்றவர்களைக் காட்டிலும் அழகுள்ள ஆண்மக்களும் பெண்களும் இருக்கிறார்கள் என்பது உண்மை.” (“இத்தகைய அழகுள்ளவர்களில் இரண்டு ஸ்திரீகளையும் மூன்று புருஷர்களையும் தானே நேரில் பார்த்ததாகத் தேசியாஸ் கூறுகின்றான்”)

“இந்தியாவினுடைய நடுப்பாகத்தில் குள்ளவடிவினரான ஒரு ஜாதியார் இருக்கின்றனர். அவர்களில் உயர்ந்தவர் இரண்டு முழமே இருக்கின்றனர். பெரும்பாலோர் ஒன்றரை முழம் உயரமுடையவராகவே இருக்கின்றனர். அவர்கள் தங்கள் தேகத்தில் வளரும் மயிர்களைக்கொண்டே தங்கள் தேகத்தை மறைத்துக் கொள்கிறார்கள்.”

“இந்தியாவில் ஏராளமான வெள்ளி அகப்படுகின்றது. பொன்னும் இந்தியாவின் பொருள்களில் ஒன்றேயாகும்.”

“இந்தியர்கள் நியாயத்தோடு நடந்து கொள்கிறார்கள்; இராஜபக்தி பூண்டவர்களாயிருக்கிறார்கள். மரணத்தை அலக்ஷியம் செய்கிறார்கள்.”

"இந்தியர்களுக்குத் தலைவலியாவது, பல்வலியாவது, தேகத் தாலாய வேறு வியாதிகளாவது அணுகுவதே கிடையாது. அவர்கள் அநேகமாக 120, 130, 150, வயதுவரை ஜீவித்திருக்கிறார்கள்."

இந்தியாவில் 'பாரேபோன்' என்ற ஒரு செடி வளருகிறது. இஃது அநேகமாக அரசருடைய தோட்டங்களிலே வளர்க்கப்படுகிறது. இதில் பூக்களேனும் பழங்களேனும் உண்டாவதில்லை. ஆனால் பூமியில் நன்கு பதிந்துள்ள பதினைந்து வேர்களே காணப்படுகின்றன. ஒவ்வொரு வேரும் மிகவும் பருமனாயிருக்கிறது. மிகவும் மெல்லியதான வேர் ஒருகை பருமனிருக்கிறது. இந்தவேரில் ஒரு சிறுதுண்டை வெளியே எடுத்துக்கொண்டு அதன் அருகில் பொன், வெள்ளி, செம்பு, கற்கள் முதலியன கொண்டு போகப்பட்டால் யாவற்றையும்-அம்பர் என்னும் வஸ்துவைத் தவிர-அஃது இழுத்துக் கொள்ளுகிறது. இந்த வேரில் ஒரு முழத்தை எடுத்துக் கொண்டு, ஆடுகள், பட்சிகள் முதலியவைகளிடத்தில் கொண்டுபோனால் அவைகளையும் இந்த வேர் இழுத்துக் கொள்கிறது. தண்ணீரை இறுகச் செய்துவிட வேண்டுமானால், இந்த வேரில் ஒரு சிறு துண்டை அத்தண்ணீரில் போட்டால் உடனே இறுகிவிடும். இந்த வேர் வயிற்றுக்கடுப்பு முதலிய நோய்களைத் தீர்க்க உபயோகப்படுகிறது."

"(கங்கை) நதி ஆரம்பமாகும் இடத்தில் ஊதாநிறமுள்ள ஒரு மலர் உண்டாகிறது. இதிலிருந்தும் இந்தியர்கள் சிவப்பும் ஊதாவும் கலந்த நிறமான சாயத்தை உண்டாக்கிக் கொள்கிறார்கள். இந்தச்சாயம் கிரேக்கர்கள் உபயோகிக்கும் சாயத்தைவிட நேர்த்தியாயிருக்கிறது. மற்றும் இந்த மலர் உண்டாகும் இடத்திலேயே ஒருவிதமான மிருதுவுள்ள பூச்சி உண்டாகிறது. இந்தப் பூச்சியைக் கொன்று அரைத்து, தங்களுடைய உடைகள் முதலியனவற்றிற்கு சிகப்பும் ஊதாவும் கலந்த நிறமான சாயம் வேண்டுமானால் அதை உபயோகிக்கிறார்கள். இந்தியர்களுடைய சாயம் ஏற்றிய வஸ்துக்கள் பாரசீகர்களுடைய வஸ்துக்களை விட உயர்ந்தனவாயிருக்கின்றன."

"இந்தியாவில் ஒருவிதமான மரம் வளருகின்றது. இந்த மரங்களிலிருந்து புஷ்பங்களேயன்றிப் பழங்கள் உண்டாவதில்லை. இந்த மரங்களிலிருந்து ஒருவிதமான எண்ணெய் துளித்துளியாக விழுகின்றது. இதனைக் கம்பளிகளைக்கொண்டு துடைத்து எடுத்துப் பிறகு ஒரு பெட்டியில் சேமித்து வைத்துக்கொள்கிறார்கள். நல்ல

சிகப்பு இல்லாத இந்த எண்ணெய் உலகத்திலுள்ள வாசனைத் திரவியத்தை விட அதிகமான வாசனையைக் கொண்டிருக்கிறது. இதனுடைய வாசனை சுமார் ஏழு அல்லது எட்டு மைல் தூரம்வரை பரவுகின்றது. அரசரும், அரச வமிசத்தினருமே இந்த வாசனையை வைத்துக் கொள்ளும் உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு முறை, இந்திய அரசரால் பாரசிக அரசருக்கு மரியாதைப் பொருளாக அனுப்பப்பட்டது. இந்த வாசனையை எதற்கு ஒப்பிடுவது என்பது விளங்கவில்லை."

"இந்தியாவில் ஓர் ஊற்று, பாறையின் நடுவண் இருக்கிறது. செல்வத்தை மிகுதியாகப் படைத்த இந்தியர்கள், வியாதிகள் ஏதேனும் இருந்தால் அவைகளைப் போக்கிக் கொள்வதற்காகவும் பரிசுத்தத்திற்காகவும் இதில் நீராடுகிறார்கள். இந்த நீரில் பொன், வெள்ளி, இரும்பு செம்பு, முதலியவைகளைப் போட்டால் உள்ளே அமிழ்ந்து விடுகின்றன. மற்றவைகள்யாவும், பிணங்கள் கூட உள்ளே செல்வதில்லை; மேலேயே மிதக்கின்றன. இந்த நீர் குளிர்ச்சியுள்ளதாயிருக்கிறது. குடிப்பதற்கு மிகவும் இனிமையாயிருக்கிறது. இந்தத் தண்ணீர் குஷ்டரோகத்தைத் தீர்க்கிறது."

"இந்தியாவின் வடபாகத்திலுள்ளவர்கள் திடகாத்திர முள்ளவர்களாய் இருக்கின்றனர். இவர்களில் பதின்மூன்று முழம் உயரமுள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இருநூறு வயதுவரை வசிக்கிறார்கள்."

"இந்தியர்களுடைய அரசன் ஒரு யுத்தத்திற்குச் சென்றால் அவனுக்கு முன்னர் நூறாயிரம் யானைகளும் பின்னர் மூவாயிரம் யானைகளும் செல்லும். இந்த யானைகள் முக்கியமாகச் சத்துரு அரசனுடைய கொடிகளைக் கீழ் வீழ்த்துவதில் கண்ணுங் கருத்துமா யிருக்கின்றன. இவைகள் சத்துருவின் (கோட்டைச்) சுவர்களைத் தகர்க்கவே பழக்கப் படுத்தப்பட் டிருக்கின்றன."

"இந்தியாவில் பலவிதமான மூலிகைகள் உண்டாகின்றன. இந்த மூலிகைகள் மருந்துகளாக உபயோகிக்கப் படுவதுமன்றி பாம்புகடி முதலியவைகளைக் குணப்படுத்துவதற்கும் உபயோகப் படுத்தப் படுகின்றன."

"சிந்து நதியில் அகப்படும் ஒரு ஜந்துவினிடமிருந்து, ஒரு விதமான எண்ணெய் உண்டாகிறது. இந்த ஜந்துவினிடமிருந்து எடுக்கப்படும் எண்ணெய் இந்திய அரசனுக்கு அனுப்பி விடப்படு

கிறது. அரசன் தவிர மற்றவர்கள் இதில் ஒரு துளியே உபயோகித்துக்கொள்ள விடப்படுகிறார்கள். இந்த எண்ணெயினுடைய குணம் ஆச்சரியமாயிருக்கிறது. எவ்வளவு உயரம் மரங்களோ அல்லது வேறெச் சாமான்களோ அடுக்கிவைத்திருந்தாலும் இந்த எண்ணெயில் ஒரு சிறிதளவு விட்டால் உடனே அவையாவும் சாம்பலாகிவிடும். இங்ஙனமே ஒரு மனிதனையோ மிருகத்தையோ கொல்லவேண்டுமென்றால் இந்த எண்ணெயை ஊற்றினால் அந்த மனிதனோ அல்லது மிருகமோ நீறாகி விடுகிறான். அரசர்கள் இந்த எண்ணெயைக்கொண்டே சத்துருக்களின் நகரங்களை நெருப்புக்கிரையாக்குகிறார்கள். இந்த எண்ணெயைச் சிறு பாத்திரங்களில அடக்கம் செய்து, அவைகளைச் சத்துருக்களின் கோட்டையின் மீதோ, வேறெதன் மீதோ எறிந்தால் உடனே அவை சாம்பலாகி விடுகின்றன. இந்த நெருப்பை அவிக்கவேண்டுமானால் இதன்மீது குப்பை முதலியனவற்றைக் கொட்டவேண்டும்."

தேசியாஸின் குறிப்புகளெனக் கருதப்பட்டவைகளில் முக்கியமான சிலவற்றின் சாராம்சத்தையே கண்டு நான் எடுத்துக் காட்டியிருக்கிறேன், இக்குறிப்புகளில் கூறப்பட்ட விஷயங்களில் சில விநோதங்களாகவே பலர்க்குத் தோன்றும், ஆனால் இந்தியாவின் பண்டைய நூல்களில் ஆராய்ச்சி யுடையார்க்கு, இவைகளிற் பெரும்பாலானவை உண்மை என்றே தெரியும். 'தேசியாஸ்' என்பவன் சிந்து நதியையும், வேறொரு நதியையும்-இது கங்கையாக இருக்கலாம்-என அறிந்திருக்கிறானென்றும் இந்தியாவின் வடபாகத்தில் ஒரு பகுதியையே அறிந்திருக்கிறானென்றும் இக்குறிப்புகளினால் தெரிகிறது. இக்குறிப்புகளைப்பற்றி நீண்ட வியாக்கியானம் எழுதினும் பொருந்தும். ஆனால் அதைச் சமயம் வந்துழி நிறைவேற்ற முயல்கிறேன். ந. ச. (விவேகாநந்தம்.)

ஞானதீபம்.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-7, சஞ்சிகை-1, பக்கம்-13.)

5-வது அத்தியாயம்.

லீலா:—(மிக்க வருத்தத்துடன் தனக்குள்) எல்லாம் வல்ல இறைவனே! இரவும் பகலும்போல தீயவர்களும் நல்லவர்களும் இவ்வுலகில் நிறைந்திருக்கின்றனர். எனது வாழ்க்கையிலே இரு

வர்களின் தன்மைகளை நன்குணர்ந்தேன். இராமஸ்வாமி முதலியார், திருடர் முதலியவர்கள் கையில் அகப்பட்டு அவஸ்தைக் குள்ளானேன். பிறகு சந்திரசேகரம் பிரபுவின் ஒத்தாசையாலும், அவரது சுற்றத்தார்களின் பழக்கத்தாலும் மட்டற்ற மகிழ்ச்சி எய்தினேன். அனாதையாகிய என்னையும் எனது பெற்றோர்களை ரக்ஷிப்பதிலும், என் குடும்ப விருத்தியிலும் இவர்களுக்கு ஏன் இவ்வளவு ஊக்கம்? முன்மாதிரி தனியாயிருந்தால், துஷ்டர்களின் இம்சையால் வருந்துவேனென்று நினைத்து சந்திரசேகரப் பிரபு தன் வீட்டிலே ஓர் இடத்தை காலிபண்ணி, என்னையும் எனது பெற்றோர்களையும் அங்கும் இருக்கும்படி ஆஞ்ஞாபித்தார். எங்கள் பழைய வீட்டையும் விற்று, வந்த பணத்தை வட்டிக்கு விட்டிருக்கிறார். நான் படிப்பதற்கு பத்திரிகைகளையும் புத்தகங்களையும் வாங்கிக் கொடுக்கிறார். ஆ! எனது நண்பரே! எளியன்மேல் தங்களுக்கு எவ்வளவு கருணை! பிரதிப் பிரயோஜனத்தைக் கருதாத கருணையே கருணாகரக் கடவுளின் ஸ்வரூபமென்று கற்றோர் கூறுகின்றனர்.

ஹா! இது மட்டுமோ? என்னை கஷ்டப்படுத்திய கள்ளர் குலத்தை கருவறுக்க சென்றிருக்கும் புத்திசேனனுக்கு உதவிபுரிய என்னையும் எனது மானத்தையும் காப்பாற்றிய சந்திரசேகர வள்ளல், உடனே புறப்பட்டு விட்டார். என்ன வீரத்தன்மை! என்ன கருணை! என்ன அழகு! ஆ! இதென்னே பேதைமை! எனது நிலைமையை மறந்து என்னென்னவோ எனது நாக்கு உளற ஆரம்பித்து விட்டதே! எனது உரைகளை யாராவது கேட்டால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இதுபற்றி யன்றோ.

“நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு” என்று பெரியோர் புகன்றிருக்கின்றனர்.

(கமலம் வருகிறாள்)

ஏ! எனது அருமைத்தோழி! வருக! வருக! வருக! இலக்கணமின்மை நோக்கி இதற்குமேல் சொல்லவில்லை. என்ன அதிகாலையில் என்னை நாடிவந்தாய்?

கமலம்:—இன்றையதினம் கர்ம ஸ்வரூபத்தைப்பற்றி விவாமாக உரைப்பேன் என்று வாக்களித்ததை மறந்தனையோ? அதைக் கேட்பதற்காகவே வந்தேன். உரைத்தருள வேண்டும்.

லீலா:—கண்மணி! கமலம்! புண்ணியவதி யென்றால் நினக்கே தகும். பூர்வ புண்ணியத்தால், புண்ணிய சீலர்களாகிய பெற்றோர்

கனையும், பரமதயாளுவாகிய சந்திரசேகரம் பிரபுவை தமையனாக வும், அடைந்தனை. மிக்க தனதான்ய சம்பத்தோடும் கூடிப்பிறந் தாய் இதுவுமன்றி சரீரவனப்பும், சாரீரசம்பத்தும், நற்குணமும், அழிவில் செல்வமாகும் கல்வியையும் ஒருங்கே அமையப் பெற் றிருக்கின்றாய்.

கமலம்:—(முகத்தை சுளித்துக்கொண்டு) எனது அண்ணன் சந்திரசேகரன் உன்னை என் தமக்கையைப்போல் பாவித்து அடங்கி நடக்கவேண்டுமென்ற ஆஞ்ஞையை மீறி நடந்தறியேன். அப்படி யிருக்க, பதிவிரதா லக்ஷணமும், மிக்க வனப்பும், கல்விக்களஞ்சிய மாகிய நின்னை தமக்கையாகப் பெற்றிருக்கிற பாக்கியத்தை ஏன் கூறவில்லை?

லீலா:—(கமலத்தை வாரி யணைத்துக்கொண்டு) எனது அரு மைத் தங்கையே! என்னால் உங்களுக்கு பணச்செலவே தவிர வேறு என்ன லாபம்? நான் ஒரு அனாதைப் பெண்! நீயோ கோடீஸ்வரி! என்னை உன் தமக்கை என்று எவ்வாறு கூறமுடியும் என்று நினைத் துக் கூறவில்லை.

கமலம்:—லீலா! என்ன எல்லாம் கற்றுணர்ந்த நீயும் இவ்வாறு கூறுகின்றனையே! என் மனதைப் பரிசோதிக்கின்றாயோ? இந்த வீடும், மாடும், மனைவி மக்களும், செல்வமும், மற்றுமுள்ள அனை வற்றும் எப்பொழுதும் ஓரிடத்தில் நிலைத்திருப்பனவோ?

“ அத்தமும் வாழ்வும் அகத்து மட்டேவிழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மிவிம்மியிரு
கைத் தலைமேல் வைத்தழும் மைந்தரும் சுடுகாடு மட்டே
பற்றித்தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே”

என்று ஸ்ரீ பட்டணத்தடிகள் பகரவில்லையோ? மாதாசே! நீ உனது வறுமைக்காக இவ்வாறு மனங்கலங்குவது தகுதியன்று. செல்வ மும், தரித்திரமும் ஒருவழிநில்லா,

“ தரித்திரமென்ற பல்காற் சாற்றினை யெதிர்மறுத்தல்
பரித்திடுமச் சொற்றன்மைப் பன்மைமுற்றாக வல்லோர்
விரித்துரை பொருணீசற்றும் விளங்கிட வுணர்ந்தாயல்லை
யரித்தடங் கருங்கண்மாதே யாதலினிலைத்த தன்றால்”

என்று ஸ்ரீ குசேலப்பெருமான் தன் மனைவிக்கு உண்மை அறிவுறுத் தியவாறு “தரித்திரம்” என்னும் சொல்லை, தன்மை பன்மை வினை முற்றாகக் கொண்டு பெரியோர் பொருள் கூறுவதை யுணர்ந்த நீயும் இவ்வாறு துயரப்படுவானேன்? கல்லாத கசடர்களையும், அவர் கை

யில் பொருளிருந்தால் அவர்களை உறவினரென்று பன்முறையும் கூறி அவர்களுக்கு மரியாதை செய்வது அறிவிலிகளின் தன்மையன்றோ?

"பெரிய வின்பத்திந்திரனும்பெட்ட செய்கைச் சிறுகுரங்கு
முறியசெய்கை வினைப்பயத்தை யுண்ணுமெனவே யுணர்ந்ததனை
யரியரென்ன மகிழாது மெளியரென்ன விகழாது
மிருசார்வினையுந் தெளிந்தாரே யிறைவனூலுந் தெளிந்தாரே"

என்றபடி தீநயமகன்ற இறைவனது நூற்பொருளைக் கேட்டுணர்ந்தோர், இன்பதுன்பங்களி லுழன்று இடுக்கணுறுவரோ? "பறவையும் நிழலும்போல பழவினை தொடரும்" என்றதனால், ஜீவர்கள், முற்பவத்திலியற்றிய கர்மத்தின் பலனுக்குத் தக்கவாறு இப்பிறப்பில் இகபர இன்பத்தை அடைகுவர். இஃதையறிந்த நீயும், ஒன்று மறியாதவள்போல வருந்துவதென்னே? அடி! லீலா! இந்த கிரகம் உன்னுடையது இச்செல்வமனைத்தும் உன்னுடையதே! நீ யாதொன்றிற்கும் அஞ்சவேண்டாம். இனி கருணைகூர்ந்து கர்மஸ்வரூபத்தைப்பற்றி விவரமாக உபதேசிக்க வேண்டுகின்றேன்,

லீலா:—எனது கண்மணி! கமலமே! கர்மஸ்வரூபத்தையும், அக்கர்மத்தைப் போக்கும் உபாயத்தையும் நன்கு விளக்கும். "கர்ம நிர்ஜ்ஜரை நோன்பு"கதையை, முன் ஸ்ரீ கௌதமஸ்வாமி, சேணிகனுக் கருளியபடியே, நினக்கும் உரைக்கின்றேன். அசைவில் மனதுடன் கேட்பாயாக ஆனால் தர்மகதை ஆரம்பிப்பதற்கு முன் பக்தர்களுக்கு உதவிபுரிந்து தர்மத்தை நிலைநாட்டிய ஸ்ரீ தர்மதேவியை உனது இனிய குரலால் துதிப்பாயாக.

கமலம்:—எனதருமை லீலா அவ்வாறே துதிக்கின்றேன் குற்றம் குறைகளை எடுத்துரைப்பாயாக.

ஸ்ரீ தர்மதேவி வணக்கம்.

நாயகி— ரூபகம்.

1. அம்மணியே உம்மையன்றி யார்துணை எனக்குரைப்பாய்
அம்மாதர்ம தேவியுன்னை அடிபணிந் தேற்றினேனே.
2. மின்னலன்ன பொய்யுடலை மெய்யெனவே நம்புவேனோ
இன்னல்தரு மிப்பிறவி வேண்டே னெந்தன் நாயகியே.
3. பவசா கரத்திலுழல் பாவியேற் கருள்புரிவாய்
தவம்செய்யு மடியவற்கு கதிநிலை காட்டிடுவாய்.

4. அகளங்க மாமுனிக்கு அருள்செய்து ஆதரித்தாய்
களங்கமில் மனதாலுந்தன் தாளினைப் போற்றி செய்தேன்

5. நன்மலரால் போற்றிசெய்த என்னுயிர முனிவர்களை
அன்னமீந் தாதரித்தாய் அன்னை என்னைக் காக்கவேணும்.

லீலா:--அடி! கமலா! நினதுபாடல், கன்னலுடன் கூடிய முக்கனியின் ரசத்தைவிட அதிக சுவையுடைத்து. இனி, நம் கதையை நாடிச்செல்வோம்.

கமலம்:--கர்ம நிர்ஜ்ஜரை நோன்புகதை:—முன்னொருகாலத்தில், இந்நாவலந்தீவில், உஜ்ஜயினி நகரத்தில், கபுண்டன் பலபத்திரன் என்ற ஒருவன் இருந்தான். அவனுக்கு ஏழு புத்திரர்கள் அப்பிள்ளைகளுக்கு உரிய பிராயத்தே விவாகமாயிற்று. அவர்களிவ்வாறு இல்லற வாழ்க்கையை நடத்திவருங் காலையில் ஒருநாள் ஓர் தபோதனர், அக்கிராமத்தை அணுகி, சூரியன் அஸ்தமித்த பின் தாபதர்கள் சஞ்சரியாராதலால், இம்முனிவரரும், அப்பலபத்திரன் மனையின் மதில்புறத்தில் தங்கிவிட்டார். இவ்விருடியின் இருப்பையறியாது. பலபத்திரனின் இளைய மருமகள், அருணோதயத்திற்கு ஒரு ஜாமத்திற்கு முன் எழுந்து வீட்டின் குப்பைகளைக்கூட்டி அக்குப்பைகளையும் மற்ற நிஷேத பதார்த்தங்களையும், அம்முனிவர் மஸ்தகத்தில் கொட்டிச் சென்றனள். பொழுது விடிந்ததும், இவ்விருடிக்கேற்பட்ட இடையூற்றைக் கண்ணுற்று, பலபத்திரன், நடுநடுங்கி, அச்சமுடையோனாய், அத்தாபதரை அணுகி, குப்பை முதலியவைகளைப் போக்கி, சாஷ்டாங்க தெண்டனிட்டுச் சென்றனன். பிறகு இவ்வபசாரத்தைப் பண்ணிய, பலபத்திரனின் இளைய மருமகள் இறந்து, ஓர் வைசியனுக்கு புத்திரியாய்ப் பிறந்தனள்.

(தொடரும்)

சிக்கில் அ. ஜீவேந்திரன்.

செய்யுட் கதைகள்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-4, பக்கம்-80.)

ஆறுவது சினம்.

வெயில் உக்ரமா யெரித்துக் கொண்டிருந்தது. அப்பாதையில் பகல் பன்னிரண்டு மணிக்குப் பாட்டைசாரிகள் இருவர், முன்னால் ஒருவனும், பத்தடிக்குப் பின்னால் ஒருவனும் ஆகப்போய்க் கொண்டிருந்தார்கள்.

முன்னால் சென்று கொண்டிருந்த மனிதன், தன் சாமான்களை எல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டி, ஒரு கோலில் மாட்டி, அக்கோலைத் தன் தோளில் தாங்கிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பத்தடி பின்னால் போய்க்கொண்டிருந்தவனுக்கோ மூட்டைகள் அதிகம் இல்லை. ஆயினும், தன் பாதரக்ஷைகளின் மோதிரங்கள் அறுந்து போயினமையின், அவைகளைக் கூடிய சிக்கிரத்தில் சாலையில் சரிசெய்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் இடது கையில் வைத்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு, இவர்கள், தாங்கள் நாடியிருந்த இடங்களுக்கும், புறப்பட்ட இடங்களுக்கும் மத்தியிலிருந்த தூரத்தைக் குறைத்துக் கொண்டிருக்கும்போது, ஓர் அழகிய மாடப்புறா, முன்னவன் தோளின்மேல் சாத்தப்பட்டிருந்த சிறு கொம்பின் நுனியை அடைந்து அமர்ந்தது.

புறாவின் பளுவு ஒரு பளுவா? இல்லை யல்லவா? அதனால் முன்னவன், தன் தடியின்மேல் புறா உட்கார்ந்திருந்ததையும் உணராமல் போய்க் கொண்டிருந்தான். அது அமர்ந்து இருந்ததை அவன் அறியாமற் போனானே ஒழிய, பத்தடிக்குப் பின்னால் போய்க் கொண்டிருந்த பிரயாணிக்குத் தெரியாமலா போய்விடும்? தன் மூக்கிற்கு நேரே, புறா புலப்பட்டதைப் பார்த்த பின்னவன், "ஆகா! புறா எவ்வளவு அழகாயிருக்கிறது! நாளை மாலைதானே நான் நாடிய இடம் நாடப் போகின்றேன்; 'இரவு ஆகாரத்திற்கு என்ன செய்வது' என்று ஏங்கிக் கொண்டிருந்த எனக்கு எம்பிரான் ஏற்ற மார்க்கம் காட்டினார். கடவுள் கருணை வாரிதி யென்பதில் ஐயமும் உண்டோ? அப்புறாவை என் இரு கண்களுக்கு முன் அவர் இருத்தியதற்கு என் பசியே காரணம் என்பதில் என்ன ஐயம்?" என்று எண்ணினான். எண்ணி, எதனால் அப்புறாவை அடித்து வீழ்த்தலாம் என்று கருதுங்கால், காலில் மாட்டிக் கொள்வதற்கும் பிரயோசனமற்றுத் தன்னிடது கையில் இருந்த பாதரக்ஷைகளின் ஞாபகம் முந்திற்று. உடனே ஒரு நிமிஷத்தையும் நிறுத்தாமல், தயாராயிருந்த இடதுகை மிதியடிகளை வலது கையில் மாற்றிக்கொண்டு, தூக்கி விசையுடன் குறிப்பாய் எறிந்தான்.

அவர்களிருவருக்கும் நேரவிருந்த கஷ்டத்தினாலோ, இல்லாவிட்டால், உலகத்தாருக்கு ஓர் நீதியை உணர்த்தவேண்டுமென்ற பகவான் திருவருளினாலோ, அல்லது புறாவின் ஆயுள் வலிமையினால்தானோ பாதுகையில் தன்னைப் படுத்தவருவதைப் புறா உணர்ந்து

விட்டது. 'அவரவர்கள் உயிர் அவரவர்களுக்கு வெல்லம்' அல்லவா? அதுபோல, தன்னுயிரைப் பெரிதாய் மதித்து, மாடப்புருமறுவினடியில் ஓடிப்போய் விட்டது பறந்து.

எறியப்பட்ட பாதரக்ஷைகள் பிரயாணியின் பாகையின்மேல் விழுந்து, அதைத் தட்டிவிட்டது.

உடனே திரும்பினன் பிரயாணி வெகுண்டு. "இதென்ன சுத்தப் பைத்தியக்காரத் தனமாயும், பேமானித்தனமாயு மிருக்கிறது!" என்றறைந்தான். அதற்குப் பின்னவன், "நண்பரே! மன்னிக்க வேண்டும். கோபித்துக் கொள்ளவேண்டாம். நீங்கள் தயவு செய்து நான் கூறுவதைக் கேட்கவேண்டும். நீர் நினைக்கிறபடி இது சுத்தப் பைத்தியக்காரத் தனமானதும், காமாட்டித் தனமானதும் ஆனகாரியம் இல்லை. உங்கள் தோள்மேலிருக்கும் பிரம்பில் புரு ஒன்றமர்ந்திருந்தது. அதனை அடித்து வீழ்த்துவான் இவைகளை எறிந்தேனே ஒழிய உம்மைப் புண்படுத்துவதற்காக எறியவில்லை;" என்று இரந்து கூறினன்.

அவ்வார்த்தைகள் வெளிவர இடந்தந்த உதடுகள் ஒன்றாய்ச் சேர்ந்தது தான் தாமதம்:—முன்னவனுக்கு முன்னைக் காட்டினும் முனிவுமூண்டது. அவனுடைய கண்களும் முகமும் செவ்வல்லி போல் சிவந்தன. "ஓகோ! நான் என்ன ஸ்மரணை அற்றவனு? பிரம்பில் புரு உட்கார்ந்திருப்பின் எனக்குத் தெரியாமலா போகும்! வீணை என்னைப் புண்படுத்த அவைகளை எறிந்ததுமன்றி குற்றத்தைக் கேடயம்செய்து கொள்ளுகிறுபா? வெகு நன்று! வெகுநன்று!! அந்தச் செருப்புகளை எறிந்த உன் கைகளைச் செதிள் செதிளாய் நறுக்கி எறியவேண்டும். இந்தக் காதறுந்த பாதுகைகளினலேயே உன்னை படீர் படீர் என்று புடைக்க வேண்டும; புடைத்துப் புத்திப்புகட்ட வேண்டும்;" என்று புண்படப் புகன்றான்.

இதைக்கேட்கச் சகிக்காமல் செருப்பெறிந்தோன், தன் கோபத்தை அடக்கிக்கொண்டு பின்னும் சாந்தமாய், "அன்பரே! முன் கோபம்கொண்டு கண்டபடி தாம் கூறுவது அவ்வளவு நன்றாயில்லை. 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்' என்பது என் விஷயத்தில் மெய்யாயிற்று. புருவின்மேல் குறிப்பாய் எறிந்தவை, அது பறந்தேகத் தம் பாகையின்மேல் தாக்கி, அதை வீழ்த்திவிட்டது. நான் செய்தது தப்பிதம்தான், தாம் கோபம் கொள்ளாது மன்னிக்க வேண்டும், விஷயத்தை உணராமல் கண்டபடி ஏசிக்கூறுவது யுக்தமானது அல்ல;" என்று சொன்னன்.

இவ்வளவு இரங்கும் அம்முன்கோபி பின்னவன் வேணுமென்றே எரிந்ததாக வாதுக்கிழுத்தான். 'வலுவில் சண்டைக்குப் போகக்கூடாது: வந்தசண்டையை விடக்கூடாது;' என்று அவனும் கோபத்துடன் பேச ஆரம்பித்தான்...பலபலவிதமாய்ப் புகன்று கதையை வளர்த்துவானேன். * *

வாய்ச்சண்டை கைச்சண்டையில் வர ஒருவர்மேல் ஒருவர் வேட்டைநாய்போல விழுந்து அடித்துக் கொண்டார்கள். திருப்பதியில் அங்கப் பிரதக்ஷணம் சுற்றுவதுபோல் சண்டை போட்டபடியே உருண்டார்கள். கண்மூக்குத் தெரியாமல் அடித்துக் கொண்டார்கள். இருவருடைய வஸ்திரங்களும் கிழிந்தன. இருவருக்கும் பல இடங்கள் சிராய்த்து, மூக்கு உடைந்து குருதியும் கிளம்பியது. அவர்களோ ஆங்காரமிகுதியினாலும், தங்களைத் தடுக்கக் கூடியவர்கள் ஒருவர்கூட இல்லாததாலும், சாலை நிர்மானுஷ்பமாயிருந்ததாலும் வெகுநேரம் சண்டை செய்துகொண்டே இருந்தார்கள்.

முடிவில், இருவரும் மூர்ச்சித்து மண்ணில் விழுந்தார்கள்......
...............தற்செபலாய் அச்சாலையில் அத்தருணம் ஒருவர் நடந்து வந்தார். வந்தவர், பக்கத்திற் கொருவராய் மூர்ச்சித்துப் படுத்திருப்பதைப் பார்த்தார். அனாதைகள் இளைய ஆண்டு இரத்தம் ஓட அவர்களிருந்ததைக் கண்டவுடனே கருணை வாரிதியான அக்கிழவியின் உள்ளம் உருகிற்று. உடனே ஓடினார் அருகில் இருந்த ஒரு ஓடைக்கு. தன்னாடையின் தலைப்பைத் தண்ணீரில் நனைத்தார். திரும்பி வந்தார். இருவர் முகங்களிலும் நீரை இறைத்து மூர்ச்சை தெளியவைத்து எழுப்பினார். இருவரும் தத்தித்தள்ளாடி எழுந்திருந்தார்கள். அவர்கள் எழுந்திருந்ததுபோலவே இதுவரையில் அடங்கியிருந்த அவர்களுடைய கடுங்கோபமும் எழுந்திருந்தது. மறுபடியும் மோதிக்கொள்ள முந்தினார்கள். பாட்டியார், பெண் பாலையானாலும் தைர்யமூற்றுத் தடுத்திராமல் இருந்திருப்பாரேயானால், என்ன முடிவு ஆகியிருக்குமோ அறியேன்.

பள்ளிக்கூடமிருந்து வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்த பாட்டியாரால் தடுக்கப்பட்ட இருவரும் கைச் சண்டையையும் வாய்ச் சண்டையையும் சற்று நிறுத்தினார்கள். அப்போது ஔவையார் என்னும் அருள் மிகுந்த அப்பாட்டியார், இருவருக்கும் அவ்வளவு கோபமுண்டாகக் காரணத்தை வினவினார்.

முன்னவன் முன் நடந்த விஷயம் முழுவதையும் புகன்று,

"செருப்பால், அதிலுங் காதறுந்த மிதியடியால் அடிபட்டால் கோபம் வாராதா? இந்தப் பயல் முளைத்து மூன்று அம்மாவாசை ஆகவில்லை! அடிக்கலாயிற்று என்னை மிதியடியால்?" என்று உறுமினன். அப்போது மற்றவன், தான் இரங்கும் அவன் மன்னிக்காததை விளக்கினன்.

அதைக் கேட்டு அம்மையார் அதிக மனவருத்தம் அடைந்தார். ஆயினும் அப்போது எழுந்த வருத்தத்தை அடக்கிக்கொண்டு அன்னுரை நோக்கி, "என்னரும் அன்பர்காள்! உங்கள் கோபம் எந்த ஸ்திதியில் உங்களை விட்டிருக்கிறது என்பது உங்களுக்குத்தானே தெரிகிறதல்லவா? நடந்தது நடந்தாகிவிட்டது. இனிமேலாவது கோபம் கொள்ளாதேயுங்கள். கிழவியான எனக்கு, உங்களைக்காட்டிலும் அதிக அனுபவமிருப்பதனுல்தான் உங்களை இவ்வளவு தூரம் வருந்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். உண்டான கோபத்தினுல் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டீர்கள். அதனுல் ஒருவரை அடித்த பாபமும், வைத பாபமும், சேர்ந்து கொண்டன. உலகத்தில் எவ்வளவு பாபங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு பாபங்களுக்கும் இந்தக் கோபம் உற்ற தாய் தந்தை. கோபமே குடியைக் கெடுக்கின்றது. கோபமே ஒன்றையும் கூடிவர வொட்டாது. கோபமே துயர் கொடுக்கிறது. எவற்றிலும் பொல்லாதது கோபமே. சீரைக் கெடுப்பதும் கோபம். உறவை அறுப்பதும் கோபம். பழி செய்வதும் கோபம். நமக்குப் பகையாளியும் கோபம். கருணையைப் போக்குவதும் கோபம். ஈனமானதும் கோபம். நம்மைத் தன்னந்தனியாய் இருத்துவதும் கோபம். காலன்முன் கொண்டு போய்த் தள்ளிப் படுநரகக் குழியில் படுத்துவதும் பொல்லாத கோபமே. நான் வந்து தடுத்திராவிட்டால் கொலையில் கொண்டு போய் நிறுத்தியிருக்கும். இன்னும் கோபத்தின் கொடுமைகள் கணக்கற்றன. கோபமடைந்தவர்களில் முன்னுக்கு வந்தவர்கள் எவரும் இல்லை. கோபத்தால் கௌசிகன் தவத்தைக் கொட்டினன். கோபத்தால் நகுஷனும் கோலம் மாறினன். கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினன். மூங்கிலிற் பிறந்ததீ மூங்கிலை முதலற முடிப்பதுபோல், சினம் தன்னுள்ளே பிறந்து, தன் உறுகிளை எல்லாம் தவிர்க்கும். ஆதலினுல் இக்கடுஞ்சினத்திற்கு நாம் இடந்தாலாகாது. கோபம் கிளம்பினதும், வாய் அடக்கமின்றிப் பேச ஆரம்பிக்கும். அப்போது நாம் நாக்கை அடக்கவேண்டும். அதனுல்தான் திருவள்ளுவர்,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

என்று தம் நூலில் கூறியிருக்கிறார்; என்று ஒரு சிறு உபந்யாசம் செய்தார்.

ஒளவையார் வார்த்தைகளுக்கும், உபதேசங்களுக்கும் அடங்காதவர் யார்? பாம்பு பச்சிலைக்கும், மந்திரத்திற்கும் கட்டுப்படுவது போல அவர்கள் பாட்டியார் இடம் கட்டுப்பட்டு அவரை வணங்கலானார்கள். "பாட்டி! நீங்கள் கூறியதைக்கேட்டுக் களித்தனம் தாம் உபதேசித் தருளியவாறே இனி, சினம் காத்துக் கொள்ளுகிறோம். ஆனால், அதை எப்போது அடக்கிக் கொள்ளுதல் சிறந்தது சுலபமானது" என்று கேட்டு, என்னபதில் வருமோவென் றெதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்போது, எத்தனையோ இதோப தேசங்களையும், இணையற்ற அறிவையும் பழுதுபட்டுப் போகாமல் பாதுகாத்துக்கொண்டிருந்த அவர் உதடுகள் பிரிந்தன. பிறகு, "அன்பர்காள்! எப்போதெப்போது அச்சினத்தை அடக்குவது என்று நீங்கள் வினவிய வினவுக்குற்ற விடையைப்பகர நான் அசத்திபாயிருக்கிறேன். ஆயினும் ஒரு விஷயம்; கோபம் வருவதற்குமுன்னால் அடக்கிக்கொள்வது போதுமானது. வெள்ளம் வருவதற்கு முன்னால் அணைபோட்டால் தான் வெள்ளத்தால் ஏற்படும் நஷ்டங்கள் குறையும். அதுபோல நமது உள்ளத்தைக் கவர்ந்து, எழுந்து, ஓங்கிவரும் சினத்தை, முன்னதாகவே காத்துக்கொள்ளுங் குணமே குணம் என்று எவராலும் சொல்லப்படுகிறது" என்னும் இனிய பதங்கள் வெளிவந்தன.

உடனே செருப்பெறிந்தோன் அன்னையைக் காட்டிலும் அன்பாய்ப் பேசிய ஒளவையாரை நோக்கி, "பாட்டியாரே நான் அடிக்கடி கேட்டு வருத்தப் படுத்துவதற்காக என்னை மன்னிக்கவேண்டும். இன்று நான் முதலில் எவ்வளவோ சாந்தமாகத்தான் பேசினேன். எனக்கு வந்த கோபத்தை என்னாலான வரையில் அடக்க முயன்றும் முடியாமற் போய்விட்டது. அதை அடக்கத் தாம ஒரு வழி சொல்லிக் கொடுத்தால் நான் இன்னும எவ்வளவோ நன்றியுடையவனா யிருப்பேன். நான் கேட்பதை யதார்த்தமானதாயும், நல்லெண்ணத்துடன் கூடினதாயும் கொண்டு தயவுசெய்து பதில் பகரவேண்டும்" என்று கெஞ்சினான்.

அப்போது அவர், "அன்பனே! இம்மாதிரிக் கேள்விகளைக் கேட்கக்கேட்க எனக்கு இன்பமே ஒழியத்துன்பம் இல்லை. நமக்கு எதனால் சாதாரணமாகச் சினம் உண்டாகின்றது? பிறர், தெரிந்தோ தெரியாமலோ நமக்குச் செய்யும் குற்றங்களினாலே நமக்குச் சாதாரணமாகச் சினம் நெருப்புப்போல் மூளுவது உண்டு. ஆறுவது

சினம், அதனால் அதை ஆற்றிக் கொள்ளவேண்டும். ஆற்றிக்கொள்வதாவது அடக்கிக் கொள்வதே.—நாம் எப்போதாவது ஒருவருக்குக் கோபம் உண்டாகும்படி நடந்திருப்போம். பிறருக்குக் கோபம் உண்டாகும்படி நாம் அப்போது, அறிந்தோ அறியாமலோ செய்திருக்கக்கூடிய குற்றத்தை நினைப்போமேயானால் நமது சீற்றம் சாந்தமாகும்;" என்று சொன்னார்.

அவர் இனிய உபதேசங்களைப்பெற்ற இருவரும், சிநேகமாகி, மறுபடி பிரயாணம் துவக்கத் தயாராகிப் பாட்டியாரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டார்கள்.

பாட்டியார், தானும் அவர்கள் செல்லும் சாலையே போகவேண்டியிருப்பதாகப் புகன்று கொஞ்சதூரம் அவர்களைத் தொடர்ந்தார். அன்னாரிருவரும் விரோதமின்றி வார்த்தையாடிச் செல்வதைக் கண்ணுற்கண்டு களித்துப் பிறகு தன்னிருப்பிடம் ஏகினர்.

மறுதினம் உதயமாயிற்று. வழக்கப்படி தாம் ஏற்படுத்திய ஔவைக்கூடம் நுழைந்தார். தான் முதல்தினம் திருஷ்டித்த திருஷ்டியைக் கதையாகக் கூறினர். கூறிக் கோபத்தினால் உண்டான கொடுமைகளையும் எடுத்துச் சொன்னர். பிறகு பையன்களைப் பார்த்து, "ஏ குழந்தைகளே வீட்டை எரிக்குந்தீயா? அல்லது தன்னை எரிக்கும் சினமாகிய நெருப்பா கொடியது?" என்று வினவினர்.

உடனே பிள்ளைகள் எல்லாரும் ஏகோபித்து, "சினத்தீ பெரியது! சினத்தீ கொடியது!" என்று பதில் பகர்ந்தனர். "ஆகையினால் ஆறுவது எது?" என்ற வினவை, ஔவையார் அடுத்து வினவ, "ஆறுவது சினம்," என்று மறுமொழி வந்தது.

அதைக்கேட்டு, அம்மையார், இவ்வளவு அவ்வளவு என்றளவிடப்படாத ஆநந்தம் உற்று, சினங்காத்துக் கொள்ளும் விதத்தைப்பற்றியும் விஸ்தரித்தார்.

ஞாபகார்த்தமாக மறுதினம், பள்ளிக்கூடத்தின் சுவற்றில், எல்லாருக்கும் தெரியத்தக்க இடத்தில்,

"ஆறுவது சினம்."

என்றெழுப்பட்டிருந்தது.

(இன்னும்வரும்.)

லால்குடி சே. கந்தசாமி,
தமிழ் ஆசிரியன்,
குடியாத்தம், (வட ஆற்காடு ஜில்லா.)

MEDICAL NOTES.

வைத்தியக் குறிப்புகள்.

GARLIC.

வெள்ளைப் பூண்டு.—வெள்ளைப்பூண்டு இந்தத் தேசத்தில் எங்கும் உண்டு. இதன் ரஸத்தைத் தேகத்தில் தடவினால் சரீரம் கொப்பளித்துவிடும். இதனுடைய குணம் கடுகினுடைய குணத்தைப்போலிருக்கும். இதற்கு ஜீரணம் செய்யக்கூடிய சக்தி இருப்பதால் இதைக் குழம்பில் சேர்ப்பார்கள். வெள்ளைப்பூண்டை அதிகமாக உபயோகித்தால் தலை வலி, வயிறு உப்புதல், தாக மெடுத்தல், தேகம் சூடாகுதல், பேதியுடன் ரத்தங்காணல் இவை நேரிடும். காது மந்தப்பட்டால் வெள்ளைப்பூண்டு ரஸத்தில் துவைத்த பஞ்சை நாள் ஒன்றுக்கு 4, 5, 6-தடவை காதுக்குள் வைத்தால் குணப்படும். இதன் எண்ணெயைக் கீல்வாயு, வாயுப் பிடிப்பு முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். தேகத்தில் வலிவு குறைந்தால் பூண்டு சேர்க்கலாம்.

THE PEOPERTIES OF BETAL LEAVES.

வெற்றிலையின் குணங்கள். — வெற்றிலைக்கு அடியில்கண்ட வியாதிகளை ஒழிப்பதில் அதிக சக்தி உண்டு :—

1. ஜீரண சக்தியை விருத்தி செய்வதில் இதற்கு நிகர் வேறொன்றுமில்லை.

2. வயிற்றுக்கடுப்பு, மலபந்தம், மலத்துடன் ரத்தச் சீழ்வடிதல், இவைகளுக்கு ஏழு வெற்றிலையுடன் ஒரு நாட்டுப் பாக்கைச் சேர்த்து ஒரு நாளைக்கு ஐந்துதரம் போட்டுக்கொண்டால் அந்த வியாதிகள் இரண்டே நாளில் சௌக்கிய மாகிவிடும்.

3. பார்வைக் குறைவு, ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, உள்ளவர்கள் வெற்றிலையைத் தினம் உபயோகிக்க வேண்டும்.

4. தேள் கொட்டினதற்கும் கடித்ததற்கும் வசம்புத்தூளை வெற்றிலைச் சாற்றுடன் சேர்த்து அரைத்து முப்பது நிமிஷத்திற்கு ஒருதரம் பூசினால் வலியிராது.

5. தெரியாமல் மண்ணெண்ணெயைக் குடித்தவர்கள், வீசம்படி வெற்றிலைச்சாற்றை பசுமோருடன் கலந்து சாப்பிட்டால் மிகவும் நல்லது. பத்து நிமிஷத்தில் குணமாகும்.

6. நீடித்த ஆயுளை விரும்புகிறவர்கள் வெற்றிலையை ஒரு நாளும் கைவிடார்கள்.

எப்பொழுதும் ரஸத்தை உள்விழுங்கிச் சக்கையை உமிழ்ந்து விடவேண்டும்.

OPHTHALMIA.

கண்வலி.—எலுமிச்சம்பழ ரஸத்தில் படிகாரத்தைச் சுட்டுப் பொடிபண்ணிப் போட்டுக் கலக்கிக் கண்வலிக்கு உபயோகித்தல் நல்ல மருந்தாகும்.

COTTON SEED FLOUR.

பருத்திக்கொட்டை மாவு.—கோதுமை மாவைவிடப் பருத்திக் கொட்டை மாவு உடம்புக்குப் புஷ்டி தரக் கூடியதென்று மிஸ்டர் அலிஸன் என்பவர் பரிசோதித்துப் பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கிறார். இறைச்சியைப்போல பருத்திக்கொட்டை மாவு மஸ்துள்ளதாய் இருப்பதோடு, உடம்புக் கொத்ததாயும் கோதுமை மாவைவிட எளிதில் ஜீரணமாகக் கூடியதாயும் இருக்கிறதாம். அமெரிக்காவில் டல்லாஸ் டிஸ்டிரிக்டில் ஜனங்கள் அநேகமாய் கோதுமையை விட்டுவிட்டுப் பருத்திக்கொட்டை மாவை உபயோகிக்கிறார்களாம். இந்த மாவை உண்டுபண்ணும் பொருட்டு மிஸ்டர் அலிஸன் ஒரு பாக்டரி அதாவது தொழிற்சாலை ஏற்படுத்தி யிருக்கிறாராம். இந்த மாவு தயார் செய்வதற்குக் கோதுமை தயார் செய்வதில் பாதிச் செலவே ஆகுமென்று சொல்லுகிறார்.

KEROSINE OIL AND PLAGUE.

கெரோஸின் எண்ணெயும் பிளேக்கும்:—பிளேக்நோய் பரவியிருக்கிறகாலத்தில் மண்ணெண்ணெயை வீடுகளில் தெளிப்பதினால் அந்தநோய் பரவாதபடி தடுக்கலாமென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இந்த நோயால் அனேகர் மாண்டபோது, மண்ணெண்ணெய் உற்பத்தியான பாக்கூ என்கிற ஜில்லாவில் இது பிரவேசிக்கவில்லையாம். ஆகையால்தான் மண்ணெண்ணெய்க்குப் பிளேக்நோயைத் தடுக்கும் சக்தி உண்டென்று சொல்லுவது.

FLATULENT DISPEPSIA.

வாயுப் பொருமலான அஜீரணத்துக்கு:—கொஞ்சம் சர்க்கரையிலாவது ஒரு ரொட்டித் துண்டத்திலாவது மூன்று சொட்டு கஜபதி எண்ணெயைவிட்டுத் தின்றால் வாயுப் பொருமலினால் உண்டான அஜீரணம் நிவர்த்தியாகும். இந்த எண்ணெய் வாய்க்கு ரம்மியமாகவு மிருக்கும்.

(பிழைக்கும் வழி.)

மலையைவிழுங்கிய

மகாதேவன் கதை.

இது, ஓயாச்சிரிப்பைத்தரும் ஒரு மாயா விநோதக்காரன் கதை. இதில் மகாதேவனென்ற ஜெகஜாலப்புரட்டன், இளமையிலேயே இந்திர ஜாலங்களைச்செய்து ஜனங்களை ஏமாற்றுவது, மலையை விழுங்குகிறேனென்று ஒரு பிரபுவையும் ஊர் ஜனங்களையும் ஏமாற்றுவது, மாயா முயல்களை வளர்த்து தஞ்சாவூர் எத்தர்களை ஏமாற்றி, அந்த முயலை விலைக்குக் கொடுத்து அவர்களுடைய ஐவேசுகளை யெல்லாம் கைப்பற்றிக் கொள்வது, சாமியார் வேஷம் போட்டு உயிரோடு சமாதியாகி மனிதர்களை ஏமாற்றுவது, தஞ்சாவூர் எத்தர்களின் மூக்கைக் கத்தரித்து அவர்களைச் சொல்லாமலோடும்படி செய்வது, தாசிகளை ஏமாற்றி ரயிலில் சக்கின்கிளாஸ் வண்டியில் பிரயாணஞ்செய்வது ரயிலில் சென்ற நாட்டுப்புறத்தானைச் சக்கின்கிளாஸ் வண்டியில் ஏறச்செய்து போலீஸ் சங்கடத்தில் மாட்டிவைப்பது முதலிய பல விநோத செய்கைகளெல்லாம் அடங்கி யிருக்கின்றன. விலை அணா-6.

விநோதகதைத் திரட்டு.

இது, அடங்காச்சிரிப்பை யுண்டாக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் பல கதைத் தொகுதிகள் அடங்கிய புஸ்தகம். இதில், தமிழ்ப்பாவிருப்யக் கதை, கூட்டத்திற் புகுந்து வாட்டமடைந்தவர் கதை, அதிகப் பேச்சால் அவஸ்தையடைந்த கதை, பேராசை பெருநஷ்டமான கதை, பெருங்குடியர் இருவர் கதை, பெண்பிள்ளை திருடனைப் பிடித்த கதை, நெளிகொடுத்த கதை, செருக்கால் தீங்கடைந்த கதை, திருடர்கள் வித்வானுக்குச் சன்மானஞ் செய்த கதை, விஷயம் தெரியாமல் சண்டையிட்ட கதை, பெருங்காயம வாங்கிய கதை, சிலேடைப் பேச்சால் அவமானமடைந்தவன் கதை, விநோத சிலேடைக் கதை, பகல் திருடன் கதை, வாக்குச் சாதுரியத்தால் இலாபம்பெற்ற புலவர் கதை, செம்பும் போனதே கோவிந்தா என்ற கதை, சிலேடைப் புலவர் கதை பேர்போன செவிடன் கதை, பஞ்சலக்ஷணக் கதை, ஒரு சிலேடைக்கதை, கொடாக்கண்டன் கதை, விபூதியால் செல்வங்கொடுப்பவன் கதை, கொசுகு சிங்கத்தை வென்ற கதை, தென்னமரத்தில் புல்பிடுங்கின கதை, புலியிடம் வட்டிக்கணக்குத் தீர்க்கப்போன செட்டியார் கதை, தாடிக்குத் தர்க்கம்பேசிய சாமியார் கதை, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போன கதை, செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறார் என்ற கதை, வேலை கடுமையான வேலை எஜமான் இன்னாரென்று தெரியவில்லை என்ற கதை, நன்றியுள்ள எருதின் கதை ஆகிய சுமார் முப்பது கதைகளுக்குமேல் அடங்கி யிருக்கின்றன. சகலரும் வாங்கிப் படிக்கத் தகுந்த அருமை வாய்ந்த புஸ்தகம். விலை அணா 5 தான்.

ஸ்ரீபாலன்.

படிக்கப்படிக்க இனிமையைத் தரும் மகா அற்புதம் வாய்ந்த கற்பனா நாவல். நவரசங்களும் பொருந்தியது. மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுப்பது

விலை அணா 10..

உதயணன்.

இது, மனதைக் கவரத்தக்க மகாமேன்மை தங்கிய தமிழ் நாவல். சிறந்த வித்வானால் எழுதப்பட்டது. பள்ளிக்கூடத்து மாணவர்களும், மற்றவர்களும் விரும்பிப் படிக்கத் தகுந்தது. அறிவையும் ஆனந்தத்தையும் கொடுக்கத் தக்கது. விலை அணா 8.

நரிவிருத்தம் மூலமும் உரையும்.

இந்நூல், சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியராகிய திருத்தக்க தேவரால் செய்யப்பட்டது. வித்வான்களும் உச்சிமேற் கொள்ளத் தக்கது. விரிந்த உரையோடு கூடியது. உயர்ந்த நீதிகளைப் போதிப்பது. எவரும் எளிதில் படித்துணரத் தக்கது. விலை அணா 4.

கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

இப்புத்தகத்தில் ஆனந்தமாய் அமைந்துள்ள ஒவ்வொரு அத்தியாயத்தைப் படிக்கப் படிக்க ஆனந்தம் உண்டாகும். புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது. வயிறு குலுங்கச் சிரிப்புண்டாகும். இதில், வாயாடிச்சுப்பி மணப் பேச்சு, தாலிகட்ட மறந்து செய்யும் கலியாணம், கலியாணத்தில் அம்பட்டன் அவஸ்தை, மாப்பிள்ளைக்கு மீசை மொட்டையாதல், கலியாணத்தில் பஞ்சாங்கக்காரர் கலகம், கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்து விடுவது, கலியாணப் பெண்ணே பந்திபரிமாறும் வேடிக்கை, விநோத ஊர்வலம், சுப்பம்மாளின் வேடிக்கை இல்வாழ்க்கை, சித்திரக் குள்ளியின் தெய்வ பக்தி, சுப்பம்மாளின் கெட்டிக்காரத்தனம், சுப்பம்மாளின் கற்பு லக்ஷணம், மண்ணை நம்பி மரமிருக்க மரத்தை நம்பி இலையிருக்க உன்னை நம்பி நானிருக்க உலகம் பொறுக்கவில்லை. என்பது, இரத்தினசாமி பிள்ளையினுடைய இல்வாழ்க்கை முடிவு; முதலிய பல விநோத விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் விலை அணா-5

தருமசீலன் புக்டிபோ,

1/2 பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

புதிய இனிய பிரயோசனமான புத்தகங்கள்.

தனபாலன்:—(மாணவர்கட்கானது.) அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது ... விலை அணா 2.

சத்திய காமன்:—(ஓர் நவரசம் ததும்பிய இனிய நாவல்) ... விலை அணா 12.

(தபாற்கூலி வேறு.)

L. S. K. சாமி,
"கதாசிரியன்" ஆபீஸ்,
குடியாத்தம்.